**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.12.08.2025**

**O.S. No.368/2015**

**வா.சா. 2 – முத்து**

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் அழைப்பாணை வந்தது. சாட்சி தற்போது எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை வழக்கறிஞர் முருகேஷ் சொல்லி வந்தேன் என சாட்சியம் அளிக்கிறார். என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் மேற்படி வழக்கறிஞர் முருகேஷ் சொல்லி எழுதப்பட்டது என்றால் சரிதான். சப்பாணி முத்து முருகேஷ் அப்பா என்றால் சரிதான். சங்கரன், முருகன், வேலு, சண்முகம் ஆகியோர் முருகேஷ் தந்தையுடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். சண்முகத்திற்கு 3 திருமணம் ஆகி விவாகரத்து ஆகிவிட்டது தற்போது வேறு திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை நடந்து 30 வருடங்கள் ஆகிவிட்டது தனித்தனியான அவரவர் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கி போர் போட்டு பூச்செடிகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். பூக்களை பறித்து சங்கரன்கோவில் மார்க்கெட்டில் விற்பனை செய்வார்கள் என்றால் சரிதான். நான் 1, 3 பிரதிவாதிகளுக்கு சித்தப்பா மகன் என்றால் சரிதான். பெரியான் என்னென்ன சொத்துக்களை கிரையம் வாங்கினார் பூர்வீக சொத்துக்களா என எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல பெரியான் அனைத்து சொத்துக்களையும் கிரையம் வாங்கினார் எங்களுடைய பூர்வீக சொத்தை நாங்கள் பெரியானுக்கு 15 வருடங்களுக்கு முன்பாக விற்பனை செய்தோம். பெரியான் கிரையம் வாங்கிய சொத்துக்களின் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். எத்தனை சொத்துக்களுக்கு இந்த வழக்குப் போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்றால் தெரியாது. முருகேஷ் அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் 2 ஏக்கர் 9 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். அதேபோல பாகப்பிரிவினையில் வேலுவிற்கு 2 ஏக்கர் 96 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். சண்முகத்திடமிருந்து 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதால் கூடுதல் பாகமாக 2 ஏக்கர் 96 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். முருகனுக்கு பாகப்பிரிவினையில் 2 ஏக்கர் 94 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். முருகேஷ் தந்தை மற்றும் 1, 3 பிரதிவாதிகள் மேற்படி சொத்துக்களுக்கு தனிப்பட்டா பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 8 ல் உள்ள கிணறு சொத்து 1, 3 பிரதிவாதிகள் தனிப்பட்டா பெற்றுவிட்டார்கள் என்றால் இல்லை. யார் பெயரில் சர்வே எண். 8 ல் உள்ள கிணறு சொத்துக்கு பட்டா உள்ளது என்றால் பட்டா யார் பெயரிலும் இல்லை. சர்வே எண். 8 ல் உள்ள கிணறு சொத்து எத்தனை ஏக்கர் என்றால் 6 ஏக்கர். சர்வே எண். 8 ல் கிணறு உள்ளதா என்றால் சர்வே எண். 8 லும் கிணறு உள்ளது சர்வே எண். 9 லும் கிணறு உள்ளது மேற்படி 2 கிணற்றிற்கும் மின் இணைப்பு உள்ளது. சர்வே எண். 8 ல் உள்ள கிணறுக்கு மின் இணைப்பு முருகன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 9 ல் உள்ள கிணறுக்கு மின் இணைப்பு பெரியான் பெயரில் உள்ளது என்றால் சரிதான். முருகனுக்கும் வேலுவுக்கும் என்னுடன் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல பேசிக்கொள்வோம். முருகன், வேலு போர் போட்டுள்ளது நல்ல தண்ணீர் என்றால் சரிதான். கிணற்றில் உள்ள தண்ணீரைக் காட்டிலும் முருகன், வேலு போட்டுள்ள போரில் தான் அதிக தண்ணீர் கிடைக்கும் என்றால் சரிதான். இதுதான் அவர்களுக்குள் பிரச்சனை என்றால் சரிதான். முருகன், வேலு போட்டுள்ள போரில் உள்ள தண்ணீரை வக்கீல் முருகேஷ் அப்பாவிற்கு கொடுக்கவில்லை என பிரச்சனை வந்து காவல்நிலையம் வரை சென்றது என்றால் சரிதான். அதனால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை பற்றி எங்கள் குடும்பத்தில் பெரியாட்கள் பஞ்சாயத்து பேசினார்கள் அதில் நானும் இருந்தேன் என்றால் சரிதான்.

வழக்கு நடக்கும் சொத்திற்கு அருகில் எனக்கு இடம் உண்டு என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் நானும் நீதிமன்றத்தில் வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கருப்பன் மகன் முத்து நான் என்றால் சரிதான். கருப்பன் மகன் முத்து என்ற எனக்கு 1 ஏக்கர் இருந்ததா, 70 செண்ட் இருந்ததா என்றால் 1 ஏக்கர் இருந்தது. நான் சப்பாணிமுத்துவுக்காக வேண்டி தண்ணீர் கேட்டு 1, 3 பிரதிவாதிகளிடம் பேசினேனா என்றால் இல்லை. நான் சப்பாணிமுத்துவுக்காக வேண்டி தண்ணீர் கேட்டு 1, 3 பிரதிவாதிகளிடம் பேசி தண்ணீர் கொடுக்காததால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.12 16:10:10 +0530